DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 243/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மாரிமுத்து |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ. பால்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A2 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.12.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆதிராக்குடியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. நான் வீட்டில் இருந்து வெளியே வரும்போது கால் தடுக்கி கீழே விழுந்ததில் எனக்கு காயம் எற்பட்டது. அதற்காக திருவாடானை அரசு மருத்துவமனைக்.குசென்று சிகிச்சைபெற்று கொண்டேன். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம்

காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் வெள்ளைதாளில் ரேகை வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. **அந்த கைரேகை மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.கடந்த 02.11.2023 தேதி காலை சுமார் 9 மணியளவில் நானும் எனது கணவரும் எனது மகன் மகேந்திரனும் வீட்டில் இருந்தோம். எனதுமகன் சென்னையில் இருந்தபோது சரண்யா என்பவருடன் பழக்கம் இருந்துள்ளது. ஆனால் அந்த உறவு முறிந்து அவர் வீட்டிற்கு வந்து அவருக்கு வேறு பெண் பார்த்து கொண்டிருந்தோம். இதை தெரிந்த சரண்யாவின் அப்பாவான எதிரி பூமிநாதனும் மாமாவான எதிரி முத்துமாணிக்கமும் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை பார்த்து கெட்டவார்த்தையால் அசிங்கமாகபேசி என் மகளை விட்டுவிட்டு வேறு ஒருபெண்ணை எப்படி திருமணம் செய்யலாம் என்று கேட்டுபிரச்சனைசெய்தார்கள் என்றால் சரியல்ல.

2.எதிரிகள் இருவரும் கருவேல்கம்பை எடுத்து எனது மகனை தாக்குவதற்காக எறிந்தபோது நான் இடையில் வந்ததால் என் தைலையில் பட்டு இரத்த காயமும் வலது கணுக்காலில் இரத்த காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இதை பார்த்து கொண்டிருந்த ஆரோக்கியமேரி அவர்கள் இருவரையும் விலக்கி விட்டார் என்றால் சரியல்ல.

3.எங்கள் வீட்டிற்கு புகுந்து எங்கள் மூவரையும் அசிங்கமாக பேசி எனக்கு இரத்த காயம் ஏற்படுத்தியதற்காக நான் காவல்நிலையம் சென்று புகார்கொடுத்துவிட்டு தற்போது மருத்துவமனையில் வைத்து எழுதாத வெள்ளைதாளில் கைரேகை வைத்து கொடுத்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4.எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.